மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்ட முன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2016). மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2016)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், பேச வேண்டுமா, பேசுங்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32/2006 சட்டத்திலே திருத்தம் கொண்டு வரப்படுகிறது. அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், 1-1-2007 முதல்*

@ 20—2—2016 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

என்று பின் தேதியிட்டு அமல்படுத்துகிறபோது அரசுக்கு இழப்பு ஏற்படலாம் அல்லது இதை வசூலிக்க நேருகிறபோது, நோக்கியாவுக்கு முன் தேதியிட்டு வரி போட்டதால் ஏற்பட்ட பிரச்சினையை இங்கே நாம் விவாதித்திருக்கிறோம். ஏற்கெனவே, இதே Commercial Tax-ல் பின் தேதியிட்டுப் போட்டதால், 60 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது என்று நம்முடைய அவையிலே மீண்டும் அதற்கு அனுமதி கோரி இங்கே ஒரு Notification கொடுக்கப்பட்டது. அதற்கு நான் விளக்கம் கேட்டு கடிதம் கொடுத்திருக்கிறேன். எனக்கு இன்னும் பதில் வரவில்லை. ஆகவே, இதிலே நமக்கு என்ன இழப்பு ஏற்படும்; இழப்பு ஏற்படுமென்றால் பின் தேதியிட்டு ஏன் போட வேண்டும்? Prospective-ஆக ஏன் அமல்படுத்தக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் துறை கொள்கைகளின்படி, புதிய, விரிவுபடுத்தப்படும் தொழில்கள், முதலீட்டின் அளவு, தொழிலின் அமைவிடம் மற்றும் பிற அடிப்படை விதிகளின் அடிப்படையில் மதிப்புக்கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரி தொடர்பான நிதி ஊக்கத் தொகைகளின் அமைப்பு முறைத் தொகுப்பு உதவிக்குத் தகுதியுடையனவாகும். அரசுக்கு வருவாய் இழப்பில்லாமல் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊக்கத் தொகை பெறும் அத்தகைய தொழிற்சாலைகளிடமிருந்து பொருட்களை விலைக்கு வாங்கும் வணிகர்கள் அக்கொள்முதலின்போது செலுத்தப்பட்ட மதிப்புக்கூட்டு வரிக்கு உள்ளீட்டு வரி வரவுபெற அனுமதிக்கப்படுகின்றனர் என்ற பொருண்மை இருப்பினும், அவ்வாறு செலுத்தப்பட்ட வரியானது சில நேர்வுகளில் தொழிற்சாலைகளுக்கு மானியமாகத் திருப்பியளிக்கப்படுகிறது. அத்தகைய வணிகர்கள் அத்தகைய தொழிற்சாலைகளிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்ட பொருட்களை, கணிசமாக மாநிலங்களுக்கிடையேயான விற்பனையாகவோ அல்லது ஏற்றுமதி விற்பனையாகவோ செயற்படுத்துபவராக இருப்பின், ஏற்றுமதி விற்பனை வரி வீதமானது பூஜ்ஜிய விகிதத்தில் இருப்பதாலும் மற்றும் 5 சதவிகிதம் அல்லது 14.5 சதவிகிதம் அளவிலான

[திரு. எம்.சி. சம்பத்] [2016 பிப்ரவரி 20

மதிப்புக்கூட்டு வரி விகிதத்தைவிட 'சி' படிவத்துடன்கூடிய மாநிலங்களுக்கிடையேயான விற்பனை வரியின் வீதமானது 2% ஆக இருப்பதால் அவர்களுடைய கணக்கில் ஒரு மிகையான உள்ளீட்டு வரிவரவு இருக்கக் கூடும். அத்தகைய தொழிற்சாலைகளால் செலுத்தப்பட்ட அதே வரியை இரட்டிப்பாகத் திருப்பிக் கொடுக்கும் இந்த நிலையைத் தவிர்க்கும்பொருட்டும் மற்றும் அத்தகைய தொழிற்சாலைகளிலிருந்து பொருட்களைக் கொள்முதல் செய்யும் வணிகர்களின் நலனைப் பாதுகாக்கும்பொருட்டும் மாநிலத்திற்குள் அல்லது மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் அல்லது வணிகத்தின்போது அத்தகைய பொருட்களின் மறுவிற்பனை மற்றும் அத்தகைய பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்யும்போது செலுத்தப்பட்ட மொத்த விற்றுமுதல் வரி அளவிற்கு மட்டுமே உள்ளீட்டு வரி வரவை அனுமதிப்பதற்கு 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தை, (தமிழ்நாடு சட்டம் 32/2006), 1-1-2007 முதல் முன் தேதியிட்டு செயல்திறன் பெறுமாறு திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இதில் தமிழக அரசுக்கும், வணிக வரித் துறைக்கும் எந்தவித வருவாய் வரி இழப்பீடு இல்லாமல் பார்த்துக்கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2016 *பிப்ரவரி* 20] [*பேரவைத் தலைவர்*]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2016) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-40

(ஈ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2016). மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2016)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

[@] 18—2—2016 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.